உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 03.08.2026 • மலர் 04 • இதழ்: 215 • ஞாயிறு • Edition : Nagercoil • 03.08.2026 • Vol : 04 • Issue : 215 • Page : 4 • Rs. 5/-

# அரசியலை விட விவசாயிகளின் நலனே முக்கியம்

## காவிரி விவகாரத்தில் டி.கே.சிவகுமார் உறுதி



பெங்களூரு: 'காவிரி விவகாரம் எங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. அரசியலை விட மாநிலத்தின் விவசாயிகளின் மற்றும் மக்களின் நலன்களே மிக முக்கியமானவை' என கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

காவிரி நீர் பகிர்வு விவகாரத்தில் மாநிலத்தின் சட்டரீதியான மற்றும் அரசியல் ரீதியான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து திட்டமிடுவதற்காக இன்று கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டது.

தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு தினமும் 3,500 கன அடி நீரைத் திறந்து விடுமாறு காவிரி நீர் ஒழுங்குமுறைக் குழு பிறப்பித்த உத்தரவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார், "காவிரி விவகாரம் எங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே இருந்து வருகிறது. அரசியலை விட மாநிலத்தின் விவசாயிகளின் மற்றும் மக்களின் நலன்களே மிக முக்கியமானவை.

மாநிலத்தின் நலன் சார்ந்த விவகாரங்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தின் குடிநீர்த் தேவைக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டை நீங்கள் அனைவரும் முழுமையாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும்.

நான் முன்னாள் முதல்வர்கள் பசவராஜ் பொம்மை மற்றும் ஜெகதீஷ் ஷெட்டர் ஆகியோரையும் சந்தித்து கர்நாடகாவின் கவலைகளை விளக்கினேன். அவர்களும் கர்நாடகாவின் கவலைகளை மத்திய அரசிடம் எடுத்துரைத்தனர். அவர்களின் ஆதரவுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

முதல்வர் சிவகுமாரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில், வீரப்ப மொய்லி (காங்கிரஸ்), சித்தராமையா (காங்கிரஸ்), பி.எஸ். எடியூரப்பா (பாஜக), எச்.டி. குமாரசாமி (ஜேடிஎஸ்), டி.வி. சதானந்த கௌடா (பாஜக) மற்றும் பசவராஜ் பொம்மை (பாஜக) ஆகிய ஆறு முன்னாள் முதல்வர்கள் பங்கேற்றனர்.

காவிரிவிவகாரத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஒத்துழைப்பு அளித்ததற்காக அனைவருக்கும் அவர் தனது பாராட்டுகளை தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் பாஜக எம்எல்ஏவும் மாநில சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஆர். அசோக்கும் கலந்து கொண்டார்.

தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிடக் கூடாது என்று மாநில அரசிடம் உறுதிமொழி கோரியதுடன், இந்தக் கூட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாகவும் பாஜக மிரட்டியிருந்தது. இருப்பினும், கட்சிக்குள் நடைபெற்ற உயர்மட்டக்கூட்டத்திற்குப் பிறகு இக்கூட்டத்தில் பங்கேற்க முடிவெடுத்தது. இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது.

மேலும், தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆகஸ்ட் 13ம் தேதி அறிவிக்கப்பட்டிருந்த முழு அடைப்புப் போராட்டத்தை வாபஸ் பெறுமாறு எதிர்க்கட்சிகள், விவசாயிகள் மற்றும் கன்னட அமைப்பினரை கர்நாடக முதல்வர் சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

## நாகர்கோவில் தனியார் மருத்துவமனை அருகே தோப்பில் பச்சிளம் ஆண் குழந்தை சடலம் நர்சிடம் போலீஸ் விசாரணை

நாகர்கோவில், ஆக.3

நாகர்கோவிலில் தனியார் மருத்துவமனை வளாகத்தில் உள்ள தோப்புக்குள் பச்சிளம் ஆண் குழந்தை தொப்புள் கொடியுடன் இறந்த நிலையில் கிடந்தது. இது தொடர்பாக நர்சு ஒருவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நாகர்கோவில் வடசேரி பகுதியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையின் பின்புறம் தென்னந்தோப்பு ஒன்றில் நேற்று முன்தினம் காலை தொப்புள் கொடியுடன் கூடிய ஆண் குழந்தை இறந்த நிலையில் கிடந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த பகுதியினர் உடனடியாக வடசேரி போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று ஆண் குழந்தையின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தவறான உறவில் பிறந்ததால் குழந்தையை கொன்று வீசி இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது. எனவே இது குறித்து இன்ஸ்பெக்டர் மோகன் ஐயர் தலைமையில் போலீசார் விசாரணையை தொடங்கினர்.

அப்போது அந்த தனியார் மருத்துவமனையில் யாராவது குழந்தை பெற்றுஅந்தகுழந்தையை தோப்பில் வீசி இருக்கலாமா? என்ற சந்தேகத்தின் பேரில் விசாரித்தனர். இதில் அந்த மருத்துவமனையில் பணியாற்றி வந்த நர்சு ஒருவர் ஏற்கனவே வயிறு வலிப்பதாக கூறி வந்ததுடன், சமீபகரமாக அவர் பணிக்கு வரவில்லை என்பது தெரியவந்தது.

எனவே இது குறித்து அந்த நர்சிடம் போலீசார் விசாரணை நடத்த சென்றனர். இதில் அவர் உடல் நல குறைவால் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அந்த நர்சிடம் விசாரித்தனர். முதலில் தனக்கு எதுவும் தெரியாது என்றவர், போலிஸ் விசாரணை தீவிரானதால் குழந்தை தனக்கு பிறந்தது தான் என்பதை ஒப்பு கொண்டதாக கூறப்படுகிறது.

அந்த நர்ஸ் திருமணமாகாதவர் எனவும், காதலனுடன் நெருக்கமான உறவில் கருத்தரித்து, குழந்தை இறந்து பிறந்ததால் பயத்தில் வீசியதாக கூறியுள்ளார். ஆனால் இதில் பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. குழந்தையின் உடல் நேற்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு பிறகு குழந்தை கொல்லப்பட்டதா? அல்லது இறந்து பிறந்ததா? என்பது தெரியவரும் என போலீசார் கூறியுள்ளனர். அந்த நர்ஸ் தொடர்ந்து போலீஸ் கண்காணிப்பில் உள்ளார்.



## பால்குளம் அரசுக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

கன்னியாகுமரி ஆக 03

அஞ்சுகிராமத்தை அடுத்த பால் குளத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆறாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் க.சரோஜா தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக இந்திய மொழிகள் மற்றும் பிறமொழிகள் புலமுதல்வரும், மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் ஆங்கிலத்துறைதலைவருமான முனைவர் ச. பிரபாகர் கலந்துகொண்டுமாணவமாணவியருக்குபட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டினை முன்னாள் மாணவர் சங்க பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.



எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா,இ.ஆ.ப., தலைமையில், இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களிடையே பாக்ஸ் கிரிக்கெட் விளையாட்டினை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக மதுரை மாவட்ட விளையாட்டரங்கத்தில் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் அமையப்பெற்றுள்ள முதலமைச்சரின் இளைஞர்விளையாட்டரங்கத்தினை (பாக்ஸ்கிரிக்கெட்) பொதுமக்களின்பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை, மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி, மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சோ.கார்த்திகேயன், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் தி. நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.


## நாகர்கோவிலில் ஓடும் பஸ்ஸில் பெண்ணிடம் மூன்றரை பவுன் செயின் பறிப்பு

நாகர்கோவில், ஆக. 3

நாகர்கோவில் அருகே உள்ள கீழமணக்குடி பகுதியை சேர்ந்தவர் பீட்டர் ஜான் மனைவி ஸ்கோலாஸ்டிகா பனியடிமை (75). இவர் நாகர்கோவில் வடசேரி பகுதியில் உள்ள ஒரு பெந்தேகோஸ்தே சபைக்கு செல்வதற்காக புத்தளத்திலிருந்து நாகர்கோவில் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தார். வேப்ப மூடு சந்திப்பில் இறங்கி பின் அங்கிருந்து வடசேரி செல்லும் பஸ்ஸில் ஏறினார். வடசேரி பஸ் நிலையத்தில் இறங்கிபார்த்தபோது அவரது கழுத்தில் கிடந்த மூன்றரை பவுன் தங்கச் செயினை காணவில்லை. பஸ்ஸில் தேடியும் கிடைக்கவில்லை.

இவர் புத்தளத்திலிருந்து பஸ் ஏறி வேப்பமூடு பஸ் நிறுத்தத்தில் வந்து இறங்கிய பஸ்ஸில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்துள்ளது. குறிப்பாக பெண்கள் அதிக அளவில் இருந்துள்ளனர். இந்த கூட்ட நெரிசலை பயன்படுத்தி மர்ம பெண் கைவரிசை காட்டி உள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து கோட்டாறு காவல் நிலையத்தில புகார் அளிக்கப்பட்டது. புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். பஸ்களில் தொடரும் இது போன்ற செயின் பறிப்பு சம்பவத்திற்கு காவல் துறை முற்றுப்புள்ளிவைக்க வேண்டும்எனபொது மக்கள் மற்றும் பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## தேனி மாவட்டம் சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை

## களியாக்காவிளை பேருந்து நிலைய பணிகளை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நாகர்கோவில், ஆக.3

களியாக்காவிளையில் நடைபெற்று வரும் பேருந்துநிலைய பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:.

களியாக்காவிளையில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024 2025 ன் கீழ் ரூ.9.20 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது அங்கு நடைபெற்று வருகிறது. மேற்கூரைதூண்அமைக்கும் பணிக்கு அஸ்திவாரம் போடுவதற்காக மண் தோண்டப்பட்ட இடத்தில் வடிகால் தண்ணீர் தேங்கியிருந்தது. தற்போது தேங்கப்பட்டிருந்த வடிகால் நீரை அப்புறப்படுத்தி மண்நிரப்பி சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் களியக்காவிளை பேருந்து நிலையத்தில் முகப்பு கூரை அமைக்க துறை சார்ந்த அறிவுறுத்தப்பட்டது. இப்பணிகளை நவம்பர் மாதம் இறுதிக்குள் விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஒப்பந்ததாரக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் உதவி செயற்பொறியாளர்கள், செயல் அலுவலர், இளநிலை பொறியாளர், பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வாளர், துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# விளாத்திகுளம் அருகே 5 கிலோ மீட்டர் சாலையை கடக்க 1/2 மணி நேரமாகும் போக்குவரத்துக்கு லாயக்கற்ற சாலை



விளாத்திகுளம் ஆகஸ்ட் 03. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதூரில் இருந்து கந்தசாமிபுரம் கிராமத்திற்கு மொத்த தூரம் 15 கிலோ மீட்டர் தூரமாகும் ,இதில் 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாதலாபுரம் கிராமம் வரை நெடுஞ்சாலைதுறை சாலையாகும், மாதலாபுரம் கிராமத்திலிருந்து கந்தசாமிபுரம் கிராமம் வரை 5 கிலோ மீட்டர் தூரம் ஊராட்சி ஒன்றிய கிராமப் புறசாலையாகும், இந்த 5 கிலோமீட்டர் சாலை மிகவும் மோசமாக இருப்பதால், இந்த சாலையை பயன்படுத்தும் கந்தசாமிபுரம், P.ஜெகவீரபு ரம் ,புதுச் சின்னையாபுரம், சேர்வைகாரன்பட்டி, சங்கரப்பநாயக்கன்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் துத்திநத்தம் பெருநாழி, உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பள்ளிகல்லூரி வாகனங்கள் அரசு போக்குவரத்து இருசக்கர வாகன ஓட்டிகள் மிகவும் பாதிப்படைந்து வருகின்றனர். மேலும் அப்பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர் பிரசாத் கூறுகையில்,இந்த மாதலாபுரம் முதல் கந்தசாமிபுரம் வரை 5 கிலோ மீட்டர் தூரமுள்ள இந்த சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது,இந்த சாலையை கடந்த ஆட்சியில் இருந்த அரசும் தற்போது உள்ள அரசும் சாலையை சீரமைக்கவோ அல்லது புதிய சாலை அமைக்கவும் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை, இதனால் இந்த சாலையில் பயணிக்கும் இருசக்கரவாகனங்கள்முதல்கனரக வாகனங்கள் வரை அடிக்கடி பழுதாகி வருகிறது. குறிப்பாக 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த சாலையைக் கடக்க 1/2 மணி நேரம் ஆகிறது, ஒரு அவசரத்திற்கு கர்ப்பிணி பெண்கள் மருத்துவமனைக்கு செல்ல முடியாமலும்,108 வாகனம் உரிய நேரத்தில் வர முடியாமலும்,பள்ளி,கல்லூரி வாகனங்கள் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாமலும் பெரும் இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். அதேபோல் பொதுமக்களுக்கு புதிய பேருந்து கொடுத்து என்ன பயன்? சாலைஇங்கேசரிஇல்லை என்று குற்றம் சாட்டுகின்றனர், எனவே தமிழக அரசு சாலையை சீரமைத்து தர வேண்டும் என்று அப்பகுதியை சேர்ந்த கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



## கும்பகோணத்தில்

# 40 ஆண்டுகளுக்கு பிறகு வாய்க்கால் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்த அமைச்சர் வினோத்

தஞ்சாவூர்: கும்பகோணம் வட்டம் மாங்குடியில் பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் தலைப்பில் 40 ஆண்டுகளுக்குப்பிறகு வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தூர் வாரும் பணியை தொடங்கி வைத்தார்.

கும்பகோணம் வட்டம் பேட்டை வடக்கு தெருவில் காவேரி ஆற்றில் இருந்து பழவத்தான் கட்டளை வாய்க்கால் பிரிகின்றது அந்த வாய்க்காலில் இருந்து பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் பிரிந்து சுமார் 12 கிலோமீட்டர் பயணித்து செட்டிமண்டபம் ஐந்து தலைப்பு வாய்க்காலில் கலந்து, பின்னர் பாசன வாய்க்காலாக செல்கிறது.

இந்தநிலையில்பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்காலில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு காரணங்களால் தூர் வாராமல் போனது. இதனால் பல பகுதிகள் தூர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வாய்க்கால் இருக்கும் தடம் அழிந்து தெரியாமல் போனது.

னால் மழைக்காலங்களில் வாய்க்காலில் மழை நீர் செல்லாமல் பக்கவாட்டில் உள்ள வயல்கள், குடியிருப்புகள், வணிக நிறுவனங்களுக்குள் மழை நீர் புகுந்து பெறும் சிரமத்தை ஏற்படுத்தியது.

இதை தொடர்ந்து சமூக ஆர்வலர்கள், வேளாண்மை துறை அமைச்சர்வினோத்திடம், கும்பகோணத்திற்குள் செல்லும் வாய்க்கால்களை உள்ள ஆக்கிரப்புகளை அகற்றி, தூர்வாரி, காவிரி நீரை விட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இதைத்தொடர்ந்து சிட்டி யூனியன் வங்கி சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதியின் கீழ் பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் தூர்வார முடிவுசெய்யப்பட்டடது. அதன்படி, வேளாண்மை துறை அமைச்சர் வினோத் அந்த வாய்க்காலில் தூர் வாரும் பணியினை நேற்று தொடங்கி வைத்தார்.

அவருடன் நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் முத்துமணி, உதவி பொறியாளர் கார்த்திகேயன், தமிழக வெற்றி கழக வடக்கு மாவட்ட செயலாளர் நிஜாமுதீன், மாநகர செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக நீர்வளத் துறை அதிகாரிகள் கூறியது; பல ஆண்டுகளுக்கு பிறகு பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் நீர்வளத் துறை பொக்லின் இயந்திரம் மூலம் தூர்வாரப்படுகிறது. இந்த வாய்க்கால் மூலம் கும்பகோணம் நகருக்குள் காவிரி நீர் செல்லும். அதனால் மாநகர பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டும் உயர வாய்ப்புள்ளது. மேலும் 500 ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்திற்கும், மழைக் காலங்களில் மழை நீர் கடைமடை வரை தடையின்றி செல்லும்.

மாங்குடியில் இருந்து கும்பகோணம் மாநகரம் கரும்பாயிரம் கொண்ட விநாயகர் கோயில் தெரு வரை நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 கி.மீ. தூரத்திற்கு முதற்கட்டமாக தூர்வாரப்படும். அதன் பின் மாநகராட்சி சார்பில் தூர்வார வேண்டும். இந்த பணி 20 நாட்களில் நிறைவடை என எதிர்பார்க்கப் படுகிறது என்றனர்.

வேளாண்மை துறை அமைச்சர்வினோத்திடம், திருப்பதியில் நிதிநிலை அறிக்கை வைத்து வழி பட்ட தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை குறித்து கேள்வி கேட்டதற்கு, பட்ஜெட் இருக்கிறது என பதில் கூற மறுத்து அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

# புத்தக திருவிழாவில் 500 பேர் கலந்து கொண்ட புத்தக வாசிப்பு இயக்கம்



ஈரோடு ஆக 3 மக்கள் சிந்தனைப் பேரவை மற்றும் மாவட்டம் சார்பில் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் அரசு கல்லூரி மைதானத்தில் ஈரோடு புத்தகத் திருவிழா நிகழ்ச்சி நடந்து வருகிறது.

இதை யொட்டி ஈரோடு மாவட்டம் முழுவதும் 22 நிமிடங்கள் தொடர் வாசிப்பு இயக்கம் பள்ளிக் கல்வித்துறை மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதையொட்டி, ஈரோடு புத்தகத் திருவிழா அரங்கில் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் டாகடர் திருமுருகன் தலைமையில் மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட 550 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு காலை 9.30 மணிக்குத் தொடங்கி தொடர்ந்து இருபத்து இரண்டு நிமிடங்கள் புத்தகம் வாசித்தனர். வாசிப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட அனைவரும் தாங்களே புத்தகங்களை எடுத்து வந்து வாசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பிறகு கவிஞர் கண்ணதாசன் நூற்றாண்டு நினைவு சிறப்பு நிகழ்வாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தமிழருவி மணியன் 'காவியத்தாயின் இளைய மகன்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். விழாவில் மூத்த பத்திரிகையாளர், நூலாசிரியர், ஆவணப்பட இயக்குனர் மணாவுக்கு மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. இதை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி வழங்கினார்.

சென்னை சில்க்ஸ் & ஸ்ரீ குமரன் தங்க மாளிகை நிர்வாக இயக்குனர் பி.கே. ஆறுமுகம் நிகழ்வுக்குத் தலைமையேற்றார். மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் நீதிபதிகள், வழக்குரைஞர்கள், பேராசிரியர்கள், கல்லூரித் தாளாளர்கள், முதல்வர்கள் மற்றும் பல துறை சார்ந்த பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# எம்.சி.சி பள்ளியின் அலங்கார நுழைவுவாயில் திறப்பு விழா

சென்னை கிறித்துவக் கல்லலூரி மேனிலைப் பள்ளியில் 1976 ஆம் ஆண்டு பயின்ற மாணவர்கள்நிதி உதவியுடன் ரூ.80 இலட்சம் செலவில் பள்ளியின் கடிகாரக் கோபுரம், பெயர்ப்பலகையுடன் கூடிய அலங்கார நுழைவாயில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில்சிறப்பு அழைப்பாளராக எம்.சி.சி. அசோசியேசன் தலைவர் கே.எம். மேமன் கலந்து கொண்டு இந்நுழைவாயில் பெயர் பலகையை திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் எம்.சி.சி. பள்ளியின் தலைமையாசிரியரும் தாளாளருமான ஜெபதாஸ் தினகரன் மற்றும் ஆசிரியர்கள், பணியாளர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். எம்.சி.சி பள்ளியின் தாளாளர் ஜெபதாஸ்தினகரன் இந்நிகழ்வு குறித்து பேசுகையில், 191 ஆண்டுகள் பராம்பரியம் மிக்க இப்பள்ளியின் புதிய நுழைவாயில் திறப்பு விழாவிற்கு வருகை தந்து திறந்து வைத்த எம்.சி.சி அசோஸேசியன் தலைவர் கே.எம்.மேமன் அவர்களுக்கும் , இந்நுழைவாயிலை அமைக்க ரூ.20 இலட்சம் நிதி உதவி அளித்த 1976 ஆண்டு எம்.சி.சி.பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்களுக்கும்

இப்பள்ளியின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார்.



கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில், 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி விழாவில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக, நடைபெற்ற நாய் கண்காட்சியில் கலந்துகொண்ட நாய்களில் ழூளநச யுடட ஊாய அழைளொலி பட்டத்தை வெளிநாட்டு இனங்களில் ஜோலார்பேட்டை சேர்ந்த .அருள் உதயராஜ் என்பரின் பெல்ஜீயம் மெலிநோய்ஸ் என்ற நாயினமும், வரட்டனப்பள்ளி சேர்ந்த திரு.சூரத் என்பரின் சிப்பிப்பாறை நாட்டு நாயினமும், பப்பி வைகையில் .ராகவேந்திரன், .குணசேகரன் ஆகியோரின் நாயினத்திற்கும் பரிசு கோப்பை மற்றும் பாராட்டு சான்றிதல்களை கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர்கள் வழங்கினார்கள்.

# வெற்றிநிதி சின்னையன் நியமனம்; தலைவர்களின் சிலைகளுக்கு மரியாதை



ஈரோடு ஆகஸ்ட் 03 லட்சிய ஜனநாயகக் கட்சியின் ஈரோடு மேற்கு மற்றும் பவானி மாவட்டச் செயலாளராக Dr.வெற்றிநிதி சின்னையன் (MBBS., MD(OG)., FRM.,) புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். தமக்கு இந்த பொறுப்பை வழங்கிய கட்சியின் மாநிலத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் MLA, மாநிலப் பொதுச்செயலாளர் திரு நெல்லை ஜீவா, மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் திரு லிங்கராஜ், மாநில முதன்மை அமைப்பாளர் திரு கார்த்திகேயன் மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் பிரகாஷ் சின்னையன் ஆகியோருக்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். "சொல் அல்ல! செயல்!!" என்ற கட்சியின் முழக்கத்திற்கு ஏற்ப, கட்சிப் பணிகளை விரைவுபடுத்தி புதிய உறுப்பினர்களை பெருமளவில் சேர்க்கும் பணிகளில் ஈடுபடப்போவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நியமனத்தைத் தொடர்ந்து, ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் உள்ள காமராஜர் சிலைக்கும், பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கும் Dr.வெற்றிநிதி சின்னையன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உடன்கிழக்கு மாவட்ட செயலாளர் அருள் மற்றும் ஈரோடு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் மங்கையர்க்கரசி பிரகாஷ் உட்பட பலர் இருந்தனர்.

# கேரளா மழை: 8 பேர் உயிரிழப்பு, 13 பேர் காயம்

திருவனந்தபுரம்: கேரள மாநிலத்தில் கன மழை காரணமாக 8 பேர் உயிரிழந்ததாக அம்மாநில முதல்வர் வி.டி.சதீசன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் நேற்று கனமழை பதிவானது. இதனால் அங்கு நிலச்சரிவு, வெள்ளம் ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக முதல்வர் வி.டி.சதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார். மழை காரணமாக 8 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்துள்ளனர். 8 பேர் மாயமாகி உள்ளனர். மழையால் 27 வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. 196 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்தது. சுமார் 5,792 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதற்காக 209 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மழை தொடரும்

இந்நிலையில், பத்தனம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்கு 'ஆரஞ்சு அலர்ட்' கொடுத்துள்ளது வானிலை ஆய்வு மையம்.

இந்த மாவட்டங்களில் அதிக மழை பொழிவுக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக கேரளாவில் உள்ள ஆறுகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் அதிகளவு தண்ணீர் பெருக்கெடுத்துள்ளது. சாலையில் மழை நீர் தேங்கியுள்ளது. சுமார் 24 முதல் 30 மணி நேர தொடர் மழை காரணமாக முல்லை பெரியாறு அணை வேகமாக நிரம்பி வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இதனால் சில இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது

# கோவை ஸ்டேன்ஸ் சிபிஎஸ்இ பள்ளி ஆண்டு விழா



கோவை ஸ்டேன்ஸ் சிபிஎஸ்இ பள்ளியின் 10 ஆம் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஸ்டேன்ஸ் கல்வி நிறுவனங்களின் தலைவர் மெர்சி ஊமன்,பள்ளி தாளாளர் பிலிப் ஆர்.ஜே.பவுலர்,கௌரவ பொருளாளர் டாக்டர் ஜேம்ஸ் ஜே.ஞானதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

ஸ்டேன்ஸ் சி.பி.எஸ்.இ முதல்வர் ஜலின் ஜெத்ரோ வரவேற்புரையாற்றி ஆண்டு அறிக்கை வாசித்தார். தொடர்ந்து பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், பள்ளியின் பத்து ஆண்டு சாதனைகளை வெளிப்படுத்தும் பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறின. பின்னர் சிறப்பு விருந்தினர் பிலிப் ஆர்.ஜே.பவுலர் தனது உரையில், ஸ்டேன்ஸ் கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களின் நிறுவனர் சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் குறித்து வரலாற்றுச் சம்பவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். இளம் வயதில் இந்தியா வந்த ராபர்ட் ஸ்டேன்ஸ், கோவை போத்தனூர் ரயில் நிலையத்தில் இறங்கிய போது, இப்பகுதியில் போதுமான கல்வி நிறுவனங்கள் இல்லாததை உணர்ந்தார். அந்தக் குறையை போக்கும் நோக்கத்தில்தான் ஸ்டேன்ஸ் பள்ளி உருவாக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

மேலும், கோவை மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் ஸ்டேன்ஸ் நூற்பாலை மற்றும் ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் ஆகிய தொழில் நிறுவனங்களையும் அவர் தொடங்கினார். அதன் மூலம் கோவை தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்ற பெருமையைப் பெறுவதற்கான அடித்தளத்தை அமைத்த முன்னோடியாக ராபர்ட் ஸ்டேன்ஸ் திகழ்ந்தார் என்றும் பிலிப் ஆர்.ஜே.பவுலர் குறிப்பிட்டார்.அத்துடன் அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு மோட்டார் தொழில்நுட்பத்தின் மீது கொண் டிருந்த ஆர்வத்தையும் திறமையையும் ஊக்குவித்தவர்களில் முக்கியமானவர் ராபர்ட் ஸ்டேன்ஸ் என்றும் தொழில் வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைந்திருக்க வேண்டும் என்பதே அவரது பார்வை என்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்து அவர் சிறப்புரையாற்றினார். மாணவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வாழ்க்கைப் பயணத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்த சிறப்பு விருந்தினர், விடாமுயற்சி,ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் உயர்ந்த சாதனைகளைப் படைக்க முடியும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பொதுத் தேர்வுகள் மற்றும் கல்வியில் சிறப்பான மதிப் பெண்கள் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றி தழ்கள் வழங்கப்பட்டன. விழாவில் பள்ளியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டாக்டர் விஜிலா கென்னடி, டாக்டர் சுசீதா ராமச்சந் திரன்,தலைமை நிர்வாக அதிகாரி வி.எம். ஜான், ஆங்கிலோ இந்தியன் பள்ளி முதல்வர் பி.ஏ.ஜான்ஸ்டீபன், ஸ்டேன்ஸ் ஐ.சி.எஸ்.இ பள்ளி முதல்வர் ஜெனட் ஜெய்பிரகாஷ் மற்றும் ஸ்டேன்ஸ் இன்டர்நேஷனல் முதல்வர் ஜார்ஜினா உட்பட நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஸ்டேன்ஸ் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர், முன்னாள் மாணவர்கள் மற்றும் ஏராளமான மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

# பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து விலகி தவெக வில் இணைந்தார் பர்கூர் தொகுதி செயலாளர் கனல் சிவா



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பாட்டாளி மக்கள் கட்சியின் பர்கூர் தொகுதி செயலாளர் கனல் சிவா அவர்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி தமிழக வெற்றி கழக மாவட்ட செயலாளர் முரளி விஜய் மற்றும் ஊத்தங்கரை சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர். இளையராஜா அவர்களின் முன்னிலையில் தன்னை தனது ஆதர்வாகளுடன் பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார் இதில் யாராலமான கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்

# அசாம் வெள்ள நிவாரணத்துக்கு அதானி குழுமம் ரூ.11 கோடி நிதி

குவாஹாட்டி: அசாம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக, அதானி குழுமம் சார்பில்ரூ.11 கோடிநிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அசாமில் பெய்த கனமழையால் கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் சாலைகள், அணைகள், விவசாய நிலங்கள் மற்றும் பொதுச் சொத்துகள் கடுமையாகச்சேதமடைந்துள்ளன. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், மாநிலத்தின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு உதவும் வகையில், அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானி, அசாம் முதல்வரின் நிவாரண நிதிக்கு ரூ.11 கோடி ஆன்லைன் மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அசாம் முதல்வர்ஹிமந்த பிஸ்வா சர்மா தனது 'எக்ஸ்' பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "விளம்பரத்தை எதிர்பார்க்காமல் அமைதியாகவும், கருணையோடும் உதவி செய்த தொழிலதிபர் அதானிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், அதானி நிதி உதவி மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான பிற பொருட்களையும் திரட்டி வருகிறார். மேலும், பெறப்படும் ஒவ்வொரு ரூபாயும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக மிகவும் பொறுப்புடனும், வெளிப்படைத்தன்மையுடனும் பயன்படுத்தப்படும்" என கூறியுள்ளார்.

# ஈரான் மீதான கூட்டு தாக்குதல் தற்காலிக நிறுத்தம்: ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன்: அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது கூட்டு தாக்குதலை திட்டமிட்டிருந்தோம். அதை தற்காலிகமாக நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஈரானில் உள்ள எண்ணெய் வளங்கள், மின்னணு நிலையங்கள் மீது வார இறுதியில் கடுமையாக தாக்க அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக அமெரிக்க செய்தி நிறுவனம் தெரிவித்தது. இதனால் மேற்காசியாவில் மோதல் தீவிரமடையும் சூழல் இருந்தது. இந்நிலையில், அந்த தாக்குதல் இடைக்காலமாக நிறுத்தப்பட்டுள்ளது. "ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ராணுவம் தயார் நிலையில் உள்ளது. அந்த தாக்குதல் இரண்டாம் உலகப் போருக்கு பிறகு பார்க்காத அதிதீவிர தாக்குதலாக இருக்கும். அதற்கு அமெரிக்கா தயார்.

இருப்பினும் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஈரான் தரப்பிலிருந்து நமக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதனடிப்படையில் தாக்குதலை தற்காலிமாக ரத்து செய்கிறேன். விரைந்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனை உடன் இதை ஏற்றுள்ளேன். எனது இந்த முடிவில் இஸ்ரேலும் இணைந்துள்ளது" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இன்று காலை தெரிவித்தார்.

அமெரிக்காவின் தாக்குதல்திட்டத்தைநிறுத்துமாறு சவூதி இளவரசர் முகமது பின் சல்மான், ட்ரம்ப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வலியுறுத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடந்த சில வாரங்களுக்கு முன்பு மீண்டும் மோதல் வெடித்தது. இந்நிலையில், பேச்சுவார்த்தைக்கு இடமளிக்கும் வகையில் தாக்குதலை இடைக்காலமாக நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் அறிவித்திருந்தார். இதனால் கடந்த ஜூலை 24க்கு பிறகு இரு தரப்பும் தாக்குதலில் ஈடுபடவில்லை என தகவல்.

ஆனால், கடந்த வியாழக்கிழமையில் இருந்து அந்த சூழல் அப்படியே அங்கு மாறியது. இரு தரப்புக்கும் இடையே மோதல் தீவிரமடைந்தது.

கடந்த தினங்களுக்கு முன்னர் ஜோர்டானில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மீது ஈரான் தாக்குதல் மேற்கொண்டது. அதை தங்களது வான் பாதுகாப்பு கவசம் இடைமறித்து அழித்ததாக அமெரிக்க ராணுவம் தெரிவித்தது. அதையடுத்து அமெரிக்காவின் பதிலடி தீவிரமாக இருந்தது. மத்திய கிழக்கு பகுதியில் உள்ள அமெரிக்க நட்பு நாடுகளும் இதற்கு உதவின. ஈரானின் உள்கட்டமைப்பு வசதிகளை அமெரிக்கா தாக்கி வந்த நிலையில் ட்ரம்ப் தாக்குதலை நிறுத்துவதாக அறிவித்துள்ளார்.

# ஜார்க்கண்டில் 'ஜெய்ஷ்' தீவிரவாதியின் தோழி கைது



கொல்கத்தா: மேற்கு வங்கத்தின் புர்பா பர்தமான் மாவட்டத்தில் ஜெய்ஷ் இ முகம் மது தீவிரவாத அமைப்பை சேர்ந்த ஹமீம் மண்டல் என்பவரை சிறப்பு அதிரடிப் படை (எஸ்டிஎப்) போலீஸார் அண்மையில் கைது செய்தனர். மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரி மீது தாக்குதல் நடத்த இவர் சதித் திட்டம் தீட்டியிருந்தார்.

இந் நிலையில் ஹமீம் மண்டலிடம் நடத்திய விசாரணையில் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அவரது தோழி அர்பிதா சர்க்காரை போலீஸார் கைது செய்துள்ளனர். ஜார்க்கண்ட் மாநிலத்தின் சாகிப்கஞ்ச் பகுதியில் அர்பிதா கைது செய்யப்பட்டார்.

செல்வாக்கு மிக்க நபர்களுக்கு எதிராக 'ஹனிடிராப்' (காதல் வலையில் வீழ்த்தி மிரட்டும்) உத்தியை பயன்படுத்தும் நெட்வொர்க்கின் ஒரு பகுதியாக அர்பிதா செயல்பட்டிருக்கலாம் என போலீஸார் சந்தேகிக்கின்றனர். அர்பிதாவின் மொபைல் போன் மற்றும் பிற டிஜிட்டல் சாதனங்களை பறிமுதல் செய்துள்ள போலீஸார் அவரது தகவல் தொடர்புகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

# ராக்கெட் ஏவுவதில் தனியார் பங்களிப்பு நல்லது முன்னாள் விஞ்ஞானி இளங்கோவன் பேட்டி



மார்த்தாண்டம், ஆக.3

43 வது சுதந்திர தின விழா வரும் 15 ம் தேதி மக்கள் உற்சாகமாக கொண்டாட உள்ள நிலையில், மார்த்தாண்டம் அருகே பயணம் பகுதியில் அமைந்துள்ள பயணம் இளையோர் மன்றம் சார்பில் கலை மற்றும் இலக்கியம் , நூலகம் மற்றும் விளையாட்டு விழா நடைபெற்றது ,

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அப்துல் கலாமுடன் பணியாற்றிய முன்னாள் விஞ்ஞானி இளங்கோவன் மரக்கன்றுகள் நட்டும் மாணவ மாணவிகளுக்கு வழங்கியும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது :

ஏர் ஆம்புலன்ஸ் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். வருடத்திற்கு உடனடி சிகிச்சை கிடைக்காததால் 8 லட்சத்து 61 ஆயிரம் பேர் இறந்து போகின்றனர். ஏனென்றால் சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு செல்ல முடியாததால் இந்த இறப்புகள் ஏற்படுகிறது.

இதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வருடத்திற்கு 22 ஆயிரம் பேர் மருத்துவமனைக்கு செல்ல முடியாமல் இறந்து போகின்றனர். தற்போது இந்தியாவில் 49 ஏர் ஆம்புலன்ஸ் உள்ளதில் டெல்லியில் மட்டும் 39 உள்ளது. தமிழ் நாட்டில்ஒன்றும்இல்லை. இது இருந்தால் பேரிடர் காலத்தில் ஏஐ தொழினுபதுடன் மீனவர்கள் கடலில் எந்த பகுதியில் இருக்கின்றனர் என்பதை கண்டறிந்து உடனே மீட்க முடியும். சாட்டிலைட் யார்வேண்டுமானாலும் பண்ணலாம். ஆனால் இதை ஏவும் ராக்கெட் பண்ணுவது தான் சிரமம். உலகிலே இந்தியா உட்பட எட்டு நாடுகளில்தான் ராக்கெட் ஏவுகின்றனர். 2025 இல் உலகம் முழுவதும் இதிலிருந்து 250 ராக்கெட்டுகள் ஏவப்பட்டன. அதில் 200 ராக்கெட்டுகள் அமெரிக்காவில் இருந்து புறப்பட்டது. 50 ராக்கெட்டுகள் மற்ற நாடுகளில் இருந்து சென்றன,

அதிலும் அமெரிக்காவில் இருந்து நாசா 7 ராக்கெட்டுகள் மட்டுமே அனுப்பியது. மீதம் எலன் மாஸ்க் ன் தனியார் நிறுவனம்அனுப்பியது. ஆனால் தற்பொழுது இஸ்ரோ 200 சாட்டிலைட்டுகளை அனுப்புவோம் என சேர்மன் நாராயணன் கூறி உள்ளார். ஆனால் இந்த வருடம் ஒரு ராக்கெட் கூட அனுப்ப வில்லை. 100 ராக்கெட்டுகள் அனுப்ப இந்தியா43 வருடங்கள் எடுத்துள்ளது. எனவே ராக்கெட் ஏவுவதில் தனியார் பங்களிப்பு என்பது நல்லது. இதனால் எந்த பாதிப்பும் இல்லை. என தெரிவித்தார்.

# புதர் மண்டிய பூங்கா இடம்!!!களம் இறங்கி சுத்தம் செய்த த.வெ.க. தொண்டர்கள்!!!



கோவை ஆக:03

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆச்சிப்பட்டி ஊராட்சியின் 8 வது வார்டு முருகன் லே அவுட் பகுதியில் சுமார் 50 சென்ட் இடம் பூங்காவுக்கு என ஒதுக்கப்பட்டிருந்து. ஊராட்சி நிர்வாகம் இந்த இடத்தில் எவ்வித பராமரிப்பும் மேற்கொள்ளாமல் இருந்து வந்தது. இதன் காரணமாக பூங்காவுக்கு ஒதுக்கப்பட்ட இடம் புதர் மண்டி காணப்பட்டது. இதனை சுத்தப்படுத்தி பூங்கா அமைத்துக் கொடுக்கும் படி அப்பகுதி மக்கள் தொடர்ந்து ஊராட்சி நிர்வாகத்திடம் வலியுறுத்தி வந்தனர்.

ஆனால் ஊராட்சி நிர்வாகம் இந்த விவகாரத்தில் அலட்சியமாகவே இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் 8வது வார்டைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகிகளான முருகேசன் முத்துலட்சுமி தலைமையில் வி.பாலமுருகன் முன்னிலையில் அருள்,ஹரிஹரன, அபிநவ், சரண் பிஜித், சபீர், பிரியா, லட்சமி, மஞ்சுளா, மிருதுளா, கோமதி, சுசிலா, சௌமியா, தேவராஜ், செல்வம், காத்தூன் பேகம், ரமேஷ், முத்துலட்சுமி, சேதுராம், ஆறுசாமி, சுமித்ரா, கனகம்மாள் ஆகியோர் கலந்து கொண்டு பூங்காவினை சுத்தம் செய்தனர்

# திருப்பூரில் 24 மணி தெலுங்கு செட்டியார் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் மாநில அளவிலான கல்வி சாதனையாளர் விருதுகள் மற்றும் ஊக்கத்தொகைகள்

## 375 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்!!




திருப்பூர்:ஆக03

திருப்பூர் தனியார் திருமண மண்டபத்தில் 24 மனை தெலுங்கு செட்டியார் சாரிடபிள் டிரஸ்ட் சார்பில் சமுதாய மக்களின் நலனுக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் அறக்கட்டளையினர் ஆண்டுதோறும் சாதனையாளர் விருது வழங்கும் விழாவை நடத்தி வருகின்றனர் அதன்படி திருப்பூரில் நடைபெற்ற மாநில கல்வி சாதனையாளர் விருது வழங்கும் விழாவில்

கல்வி, விளையாட்டு ,அறிவியல் கலை சமூக சேவை தொழில், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில்சிறந்து விளங்குபவர்களை கௌரவிக்கும் விதமாக சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது . இந்த சாதனையாளர் விருது வழங்கும் விழாவில் பிளஸ் டூ பொதுத்தேர்வில் முதல் 100 இடங்களையும் ,பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 47 இடங்களையும் பிடிக்கும் மாணவ மாணவிகளுக்கும், மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வில் முதல் ஐந்து இடங்களையும், பொறியியல் படிப்பிற்கான ஜேஇ மெயின் தேர்வில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களையும் பாராட்டி பரிசளிக்கும் நிகழ்வு நடைபெற்றது , இதேபோன்று அரசு பள்ளியில் பயின்று பிளஸ் டூ பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவி மாணவிகளுக்கும் என 375 மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத் தொகையுடன் சான்றிதழ்கள் வழங்கி பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுடன் மாணவ மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர், இந்த விழாவில் கலந்து கொண்ட சங்கத்தின் பொதுச்செயலாளர் அர்ஜூன் சூரஜ் செய்தியாளர்களிடம் கூறுகையில், வருடம் தோறும் இது போன்று மாநில கல்வி சாதனையாளர் விருதுகள் ஊக்கத்தொகையுடன் வழங்கப்பட்டு வருகின்றன ,

இந்த மாநில கல்வி சாதனையாளர் விருதுகள் கடந்த வருடம் சென்னையில் நடைபெற்றது, இந்த ஆண்டு கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு துறைகளில் அதிக அளவில் முதலிடம் பிடித்ததால் திருப்பூரில் இந்த கல்வி சாதனையாளர் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது , இதில் விளையாட்டு கல்வி அறிவியல் என பல துறைகளில் முத்திரை பதித்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டது...

# தக்கலை அருகே காதலியை மணந்த 2வது நாளில் திருட்டு வழக்கில் புது மாப்பிள்ளை கைது



தக்கலை, ஆக.3

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள மருதூர்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் மனோன்மணி ( 60). பால் வியாபாரி. இவர் கடந்த மாதம் 18ந் தேதி மாலை 6 மணிக்கு குருவிக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு செல்போனில் பேசிக் கொண்டிருந்தார். மேலும் மோட்டார் சைக்கிளில் ஒரு பையையும் வைத்திருந்தார். அதில், ரூ.7 ஆயிரத்து 400 மற்றும் கை கடிகாரம் இருந்தது.

அப்போது திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த 2 மர்ம நபர்கள் திடீரென மனோன்மணியின் கையில் இருந்த செல்போனை பறித்ததோடு, பையையும் திருடி விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் தப்பினர்.

இதுகுறித்து மனோன்மணி தக்கலை போலீசில் புகார்செய்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சம்பவம் நடந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவு களை ஆய்வு செய்தனர். அதில், மோட்டார் சைக்கிளில் சென்று பால் வியாபாரியிடமிருந்து செல்போன் மற்றும் பணம், கை கடிகாரம் பறித்தவர்களில் ஒருவர் செறுகோல் பல்லூட்டுவிளை பகுதியை சேர்ந்த ராஜகுமார் என்பவரின் மகன் அபிஷேக் (21) என்பது தெரியவந்தது.

போலீஸ் தேடுவதை அறிந்த அவர் போலிசாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு தலைமறைவானார். இந்தநிலையில் அபிஷேக் வீட்டில் இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. உடனே போலீசார் விரைந்து வந்து அவரை மடக்கி பிடித்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பணம் திருடிய வழக்கில் தேடப்பட்ட நிலையில் அபிஷேக் ஒரு மாதத்திற்கும் மேலாக தலைமறைவானார். இதனால் இனி போலீசார் தேட மாட்டார்கள் என்ற நினைப்பில் தான் காதலித்த பெண்ணை 2 நாட்களுக்கு முன்பு துணிச்சலுடன் திருமணம் செய்துள்ளார். ஆனால் மணக்கோலம் கலைவதற்குள் போலீசார் மோப்பம் பிடித்ததால், தற்போது அவர் சிறையில் கம்பி எண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இவர் மீது மார்த்தாண்டம், திருவட்டார் போலீஸ் நிலையங்களில் மோட்டார் சைக்கிள் திருட்டு, வழிப்பறி போன்ற வழக்குகள் அபிஷேக் மீது நிலுவையில் உள்ளதாக போலீசார் தெரிவித்தனர். காதலியை மணந்த 2வது நாளில் திருட்டு வழக்கில் புது மாப்பிள்ளை கைது செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பாக பேசப்பட்டது.

# கன்னியாகுமரியிலிருந்து இரு சக்கர வாகன விழிப்புணர்வுப் பிரச்சாரப் பயணம்




கன்னியாகுமரி, ஆக.3

குழித்துறை ரோட்டரி சங்கம், கன்னியாகுமரி ரோட்டரி சங்கம், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி, கயல்ரைடர்ஸ்ஃபேமிலி, ஷெர்பாஸ் ரைடர்ஸ் கிளப் ஆகியனஇணைந்து நடத்தும் கன்னியாகுமரி முதல் லடாக் வரையிலான இரு சக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சாரப் பயணமானது கன்னியாகுமரிசீறோ பாயின்ட் இடத்தில் இருந்து தொடங்கியது.

ஒரே நாடு, ஒரே நம்பிக்கை, ஒரே பயணம் என்ற கருப்பொருளுடன் நடந்த இந்த நிகழ்வின் தொடக்க நிகழ்ச்சிக்கு அகில இந்திய மருத்துவ சங்கத்தின் முன்னாள் தேசிய தலைவரும், முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநருமான டாக்டர் விஜயகுமார் தலைமை தாங்கினார். திட்டத்தலைவர் சுனில் குமார் அனைவரையும் வரவேற்றார். முன்னாள் துணை ஆளுநர்கள் டாக்டர் ஜேம்ஸ் வில்சன், டாக்டர் காவேரிக் கண்ணன், ராபர்ட்சன், தற்போதைய துணை ஆளுநர் ரகுபதி, கன்னியாகுமரி ரோட்டரி சங்கத் தலைவர்பிரின்ஸ்ஆரோக்கிய ஸ்டெவி, இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கன்னியாகுமரி மாவட்ட சேர்மன் டாக்டர் குமாரதாஸ் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.

குழித்துறை ரோட்டரி சங்க பங்கேற்பாளர்கள் பென்சிகர், ரெகு முதலான பதினொரு நபர்களுடன் பிற மாநிலத்தவருமாக ஐம்பத்திருவர் லடாக் வரை பயணிக்கிறார்கள். குழித்துறை ரோட்டரி சங்கத் தலைவர் ஸ்ரீ நாகேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார். சங்க முன்னாள் தலைவர் சஜீவ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். குழித்துறை ரோட்டரி சங்கச் செயலாளர் கிருஷ்ணதாஸ், முன்னாள் செயலாளர் ரமேஷ், கன்னியாகுமரி ரோட்டரி சங்கச் செயலாளர் ஜீசஸ் ஆகியோர் முன்னிலையில் நிகழ்ச்சித் தலைவர் கொடியசைத்து பயணத்தை தொடக்கி வைத்தார்.

# தருமபுரியில் நண்பர்கள் தினத்தை முன்னிட்டு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா

## பழைய நினைவுகளை பகிர்ந்து நெகிழ்ச்சி




தருமபுரி ஆகஸ்ட் 03

தருமபுரி மாவட்டம் அ.கொல்லஅள்ளி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், நண்பர்கள் தினத்தை முன்னிட்டு தருமபுரி அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், 1987 முதல் 1994 வரை அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பல்வேறு பிரிவுகளில் ஒன்றாகப் பயின்ற முன்னாள் மாணவர்கள் மற்றும் நண்பர்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரே இடத்தில் ஒன்று கூடியனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் மாணவர்கள்,

தங்களது பள்ளிப் பருவ நினைவுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டதுடன், நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்த நண்பர்களை கட்டித் தழுவி நலம் விசாரித்து, பழைய நட்பை மீண்டும் புதுப்பித்துக் கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல், வகுப்பறை அனுபவங்கள், விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட இனிய நினைவுகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை நினைவுகூர்ந்து நெகிழ்ச்சியடைந்தனர்.

மேலும், ஒருவருக்கொருவர் குடும்ப நலம், வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் குறித்து உரையாடி மகிழ்ந்தனர். நண்பர்கள் தினத்தை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு நிகழ்ச்சி அனைவருக்கும் மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. நிகழ்ச்சியின் நிறைவில், முன்னாள் மாணவர்கள் அனைவரும்குழுபுகைப் படம்எடுத்துக்கொண்டு, இதுபோன்ற சந்திப்பு நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் நடத்துவது என உறுதியேற்றனர். மேலும், பள்ளி மற்றும் சமுதாய நலன் சார்ந்த பல்வேறு சேவைகளை மேற்கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது என்று உறுதி எடுத்துக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டது. நிகழ்ச்சிகலந்துகொண்ட அனைத்து நண்பர்களுக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

# குழித்துறை ஆற்றில் சிவசேனா பிரமுகர் கொன்று வீச்சு

## கொலையாளிகள் கேரளாவில் பதுங்கல் கைது செய்ய தனிப்படை தீவிரம்

மார்த்தாண்டம், ஆக. 3 களியக்காவிளை அருகே கேரளா பகுதி செங்கவிளை பகுதியை சேர்ந்தவர் சுதீசன் அதுல் (30). இவர் கேரள மாநில சிவசேனா பிரமுகர் ஆக உள்ளார். இந்த நிலையில் மார்த்தாண்டம் அருகே உள்ள குழித்துறை ஆற்றில் இவர் மர்மமான முறையில் பிணமாக கிடந்தார். இது குறித்து தகவல் அறிந்த மார்த்தாண்டம் போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தி ஆற்றில் கிடந்த அவரது உடலை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உடலில் காயங்கள் இருந்ததால் அவர் அடித்து கொலை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது. கொலையாளிகளை பிடிக்க 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது அதில் சுதீசன் அதுலுடன் 4 பேர் சுற்றி திரிவது போன்ற காட்சிகள் பதிவாகியிருந்தது. அந்த காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு இடையே இந்த கொலை தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த சிலரை தனிப்படை போலீஸ் பிடித்து விசாரித்து வருகின்றனர். சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ள நபர்கள் தலைமறைவாகி விட்டனர். அவர்கள் கேரளாவில் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில் போலீசார் அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

சதீசன் அதுல் முன்விரோதம் காரணமாக கொலை செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதும் காரணமா? என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. கொலையாளிகளை பிடிக்கும் வரை சதீசன் அதுலின் உடலை பெற்றுக் கொள்ள மாட்டோம் என்று அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் உடல் பிரேத பரிசோதனை முடிந்த பின் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே தமிழ்நாடு சிவசேனா தலைவர் ரமேஷ் குமார் விடுத்துள்ள அறிக்கையில்: கேரள மாநில சிவசேனா பிரமுகர் கொலையாளிகளை பிடிக்க தமிழக அரசும், குமரி மாவட்ட காவல்துறையும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகளை கைது செய்த பிறகு சதீசன் அதுலின் உடலை பெற்றுக் கொள்வோம். என கூறியுள்ளார்.

# சென்னை குரோம்பேட்டையில் மலபார் கோட்டு & டைமண்ட்ஸ் 37வது கிளை திறப்பு விழா



சென்னை, 03, மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 37வது ஷோரூம் திறப்பு விழா சென்னை குரோம்பேட்டையில் நடைபெற்றது. இவ்விழாவில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி. வெங்கடரமணன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு ஷோரூமை திறந்து வைத்தார் .மேலும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு தலைவர் யாசர்,தமிழ்நாடு மண்டல வணிக தலைவர் சபீர் அலி, தமிழ்நாடு வடக்கு மண்டல தலைவர் அமீர் பாபு, தமிழ்நாடு மேற்கு மண்டல தலைவர் நௌசாத் சென்னை குரோம்பேட்டை கிளை தலைவர் சுஹைல், மற்றும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மேலாண்மை உறுப்பினர்கள் மற்றும் கிளை ஊழியர்கள் உடனிருந்தனர்.

இந்த ஷோரூமில் திறப்பு விழாச் சலுகைகளாக தங்கம், அன்கட், மற்றும் நவரத்தின நகைகளின் சேதாரத்தில் 30% வரைதள்ளபடி பெறலாம் . மேலும் வெள்ளி கொலுசுகள் மற்றும் பொருட்களுக்கு சேதாரத்தில் பிளாட் 25% தள்ளுபடியும், மற்றும் வெள்ளி பொருட்ககளின் விலையிலிருந்து பிளாட் 10% தள்ளுபடியும் பெறலாம்.

# பெரியாறு அணை மதகை மேவிய கேரள கழிவுகள்

## தமிழகத்துக்கு நீர் திறப்பதில் சிக்கல்



குமுளி: பெரியாறு அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் வரும் ஆனவச்சால் வாய்க்கால் இரும்பு தடுப்பு ஒட்டிய மண்தடுப்பில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் கேரள கழிவுநீருடன் மரக்கிளைகள், பிளாஸ்டிக் கலப்பதால் மதகில் அடைப்பு ஏற்பட்டு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லை பெரியாறு அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு தேக்கடி ஏரியில் இருந்து திறவை வாய்க்கால் மூலம் நீர் கொண்டு செல்லப்படுகிறது. பின்பு சுரங்கவாய்க்கால், ராட்சத குழாய்கள் மூலம் இந்த நீர் தரைப்பகுதியை வந்தடைகிறது.

இந்நிலையில் ஆனவச்சால் என்ற இடத்தில் உள்ள திறவைவாய்க்கால் பகுதி சரிவாக உள்ளதால் குமுளி, ஆனவச்சால், அட்டப்பள்ளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் மழைநீர், கழிவுதண்ணீர் இப்பகுதியை வந்தடைகிறது. மரக்கிளை, பிளாஸ்டிக் பொருட்களை தடுப்பதற்காக இங்கு தமிழக நீர்வளத்துறை சார்பில் இரும்பு தடுப்பு சல்லடைகள் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2 நாட்களாக குமுளி பகுதியில் பெய்த மழையினால் நீர்ப்பெருக்கு அதிகரித்து, இரும்பு தடுப்புக்கு அருகில் இருந்த மண்தடுப்பு உடைந்தது. இதனால் மழைநீரில் வந்த மரக்கட்டைகள், பிளாஸ்டிக் உள்ளிட்ட பல்வேறு திடக்கழிவுகள் தமிழகத்துக்குச் செல்லும் தண்ணீரில் கலந்தது.

இந்த நீருக்கான மதகு தேக்கடி வனச்சரக நுழைவாயிலில் அருகில் உள்ளது. அங்கு இக்கழிவுகள் சென்று அடைப்பை ஏற்படுத்தியதால் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இவற்றை அகற்றும் பணி கடந்த 2நாட்களாக நடைபெற்று வருகிறது.

இது குறித்து விவசாயிகள்கூறுகையில், “கடந்த சில மாதங்களுக்கு முன்பே இந்த மண் தடுப்பு பாதிக்கப்பட்டு இருந்தது. இருப்பினும் நீர்வளத்துறையினர் உரிய கவனம் செலுத்தாததால் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் கலப்பதுடன், குடிநீருக்கு கூட தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாத நிலை உருவாகி உள்ளது. ஆகவே மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்றனர்.

# ₹ 15 கோடி மோசடி வழக்கில் மேலும் ஒருவர் கைது

பழனியை தலைமையிடமாகக் கொண்டு தனியார் நிதி நிறுவனம் செயல்பட்டது. அதில் பணத்தை முதலீடு செய்வோருக்கு ஊக்கத்தொகை, தங்க நாணயத்துடன் அசல் தொகை முழுமையாக திருப்பி கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. அதை உண்மை என நம்பி மதுரை, கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ரூ.15 கோடி முதலீடு செய்தனர். ஆனால் முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.அதோடு நிறுவனமும் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட நபர்கள், திண்டுக்கல் பொருளாதார குற்றப்பிரிவு போலீசில் புகார் அளித்தனர்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து நிறுவனத்தின் நிர்வாகி செந்தில்குமார் உட்பட 4 பேரை ஏற்கனவே கைது செய்துவிட்டனர். அதேநேரம் வழக்கில் தொடர்புடைய பழனியைச் சேர்ந்த சக்திவேல் (வயது 35) என்பவர் தலைமறைவாக இருந்தார். இந்த நிலையில் அவர் திருச்செந்தூரில் பதுங்கி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார்அங்குசென்றுஅவரை கைது செய்தனர்.



# புகழ்பெற்ற மலையேற்ற வீரர் நிர்மல் உட்பட 6 பேர் பனிச்சரிவில் உயிரிழப்பு

புதுடெல்லி: பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்மற்றும்சீனாஎல்லைப் பகுதியில் உள்ள காரகோரம் மலைத்தொடரில், உலகின் 12வது மிக உயர்ந்த சிகரமான ‘பிராட் பீக்’ அமைந்துள்ளது.

புகழ்பெற்ற நேபாள வம்சாவளி மலையேற்ற வீரரான நிர்மல் ‘நிம்ஸ்’ புர்ஜா உள்ளிட்ட 6 பேர் அடங்கிய குழுவினர் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்கள் சென்று கொண்டிருந்த மேற்குப் பகுதி பாதையில், சுமார் 21,600 முதல் 21,850 அடி உயரத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கிய 6 பேரும் உயிரிழந்துவிட்டனர். இதை அவரது ‘எலைட் எக்ஸ்பெட்’ நிறுவனம் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்துள்ளது.

பிரிட்டனின் ‘குர்க்கா’ மற்றும் ‘ஸ்பெஷல் போட் சர்வீஸ்’ (எஸ்பிஎஸ்) படைகளில் பணியாற்றிய முன்னாள் வீரரான நிர்மல் புர்ஜா, முழுநேர மலையேற்ற வீரரான பிறகு பல உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.

# ரூ.45 லட்சம் லஞ்சம் கேட்ட அதிகாரியை சிக்க வைத்த ஏசிபி

மும்பை: மகாராஷ்டிராவின் பீட் பகுதி வனத்துறை அதிகாரியாக ஸ்ரீநிவாஸ் லிங்கண்ணா லக்மாவத் (40) பணியாற்றி வந்தார்.


அவருக்கு கீழ் பணியாற்றி வரும் அலுவலர் சில முறைகேடு விவகாரங்களில் சிக்கினார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும், ஊதிய உயர்வு வழங்கவும் ஸ்ரீநிவாஸ் லஞ்சம் கேட்டுள்ளார். மேலும் வனத்துறை அலுவலர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் மரம் நடும் திட்டத்தில் 12 சதவீத கமிஷன் வழங்க வேண்டும் என்றும் ஸ்ரீநிவாஸ் கோரியுள்ளார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட வனத்துறை அலுவலர் லஞ்ச ஒழிப்பு போலீஸில் (ஏசிபி) ரகசியமாக புகார் அளித் தார். வனத்துறை அதிகாரி ஸ்ரீநிவாஸ் மொத்தம் ரூ.45 லட்சத்தை லஞ்சமாக கோரினார். அவ்வளவு பெரிய தொகையை திரட்டுவது கடினம் என்பதால் ஏசிபி போலீஸார் புதிய வியூகத்தை வகுத்தனர்.

பெரிய பையின் மேற்பகுதியில் ரூ.5 லட்சம் மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை அடுக்கினர். அந்த பையின் கீழ் பகுதியில் ரூ. 40 லட்சம் மதிப்புள்ள போலி கரன்சி நோட்டுகளை அடுக்கி வைத்தனர். வனத்துறை அதிகாரி ஸ்ரீநிவாஸின் வீடு மகாராஷ்டிராவின் சத்ரபதி சாம்பாஜி நகரில் உள்ளது. அந்த வீட்டுக்கு நேரில் வந்து ரூ.45 லட்சம் லஞ்சத்தை வழங்க வேண்டும் என்று வனத்துறை அலுவலரிடம் அவர் கூறியிருந்தார்.

இதன்படி நேற்று முன்தினம் மதியம் ஸ்ரீநிவாஸின் வீட்டுக்கு சென்ற வனத் துறை அலுவலர், ரூ. 5 லட்சம் உண்மையான கரன்சி மற்றும் ரூ.40 லட்சம் போலி கரன்சி நோட்டுகள் அடங்கிய பையை அவரிடம் வழங்கினார். அப்போது வீட்டுக்குள் திடீரென நுழைந்த லஞ்ச ஒழிப்பு போலீஸார், ஸ்ரீநிவாஸை கையும் களவுமாக கைது செய்தனர்.

# மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்கு ரூ.9.74 கோடி வாடகை நிலுவை வசூல்



சென்னை : சென்னை மயிலாப்பூர் லஸ்சர்ச் சாலையில் கபாலீசுவரர் கோயிலுக்கு சொந்தமான 14 கிரவுண்ட் 910 சதுரஅடி நிலம் 1901ம் ஆண்டு அமிர்தான் ஜன் நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2001 முதல் அரசு ஆணைப்படி நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இதை எதிர்த்து அமிர்தான்ஜன் நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையால், அமிர்தான் ஜன் நிறுவனத்தின் மேல்முறையீடு, மறு ஆய்வு மனுக்களை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், நிலுவைத் தொகையை செலுத்த உத்தரவிட்டது. இதையடுத்து, 2018ம் ஆண்டு வரையிலான நிலுவைத் தொகை ரூ.9 கோடியே 74 லட்சத்து 67,151ஐ வசூலிக்கும் வகையில் ஜப்தி நடவடிக்கை எடுக்க கோயில் செயல் அலுவலர் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 18ம் தேதி விப்பு வழங்கப்பட்டு, ஆகஸ்ட் 2ம் தேதிக்குள் பணம் செலுத்த கெடு விதிக்கப்பட்டது. ஜப்தி நடவடிக்கைக்கான காலக்கெடு இன்று முடியும் நிலையில், அமிர்தான்ஜன் நிறுவனம் 10 சதவீதம் டிடிஎஸ் பிடித்தம் போக ரூ.8,77,20,436க்கான வரைவோலையை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி. விஜயகுமார் ரெட்டியிடம் நேற்று வழங்கியது.

# முதுகுளத்தூரில் லட்சிய ஜனநாயக கட்சியில் 7,000 பேர் இணைந்தனர்



முதுகுளத்தூர் ஆக. 3

முதுகுளத்தூரில் லட்சிய ஜனநாயக கட்சியின் சார்பில் மாற்றுக் கட்சியினர் இணைப்பு விழா ஞாயிற்றுக்கிழமை தனியார் திருமண மஹாலில் நடைபெற்றது.

கட்சியின் நிறுவனர் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், MLA அவர்களின் வழிகாட்டுதலின் படி நடைபெற்ற இந்த விழா மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா முன்னிலையிலும், துணைப் பொதுச்செயலாளர் செல்வ மேரி மற்றும் மாவட்ட செயலாளர் சரவணகுமார் தலைமையிலும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 7,000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் லட்சிய ஜனநாயக கட்சியில் இணைந்தனர்

விழாவில் நெல்லை ஜீவா பேசுகையில், “ராமநாதபுரம் மாவட்டத்தை வளர்ச்சியடைந்த மாவட்டமாக மாற்றுவதற்கு லட்சிய ஜனநாயக கட்சி தொடர்ந்து பாடுபடும். கட்சியின் நிறுவனர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், மாவட்டத்தில் உள்ள பல்வேறு குளம், குட்டைகளை தூர்வாரும் பணிகளை மேற்கொண்டுள்ளார். மேலும், நாராயண காவிரி கால்வாய் திட்டத்தின் கீழ் 52 கிலோ மீட்டர் தூர்வாரும் பணியும் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற மக்கள் நலப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்,என்றார் இந்த நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி செயலாளர் அய்யனார் விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி ஒன்றிய செயலாளர் முனிராஜா மற்றும்கட்சி நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் நிர்வாகிகள், ஏராளமான கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒன்றிய செயலாளர் புளியங்குடி முத்துராமலிங்கம் ஏற்பாடு செய்தார்.

# கன்னியாகுமரியில் கடற்கரை சுத்தம் செய்யும் பணி; அண்ணாமலை தொடங்கி வைத்தார்




கன்னியாகுமரி,ஆக.3 கன்னியாகுமரி முதல்தூத்துக்குடி வரை உள்ள 175 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரை பகுதியை மீட்டெடுக்கும் விதமாக, "கோஸ்டல் ரீஜெனரேஷன் மூவ்மென்ட்" என்ற பெருந்திட்ட கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணியை அண்ணாமலையின் ‘வீ த லீடர்ஸ்’ இயக்கம் தொடங்கியது.

இதற்கான தொடக்க விழா நிகழ்ச்சி கன்னியாகுமரி கடற்கரையில் நடந்தது. இதில் வீ த லீடர்ஸ்' இயக்கத்தின் தலைவர் அண்ணாமலை தொடங்கி வைத்தார். மேலும் அவர் கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் தூய்மை பணியிலும் ஈடுபட்டார். பின்னர் அவர் பேசுகையில்; தமிழகத்தினுடைய மொத்த கடற்கரை நீளம் 1075 கிலோமீட்டர். இதில் நம்முடைய அமைப்பு 175 கிலோமீட்டர் தூர கடற்கரையை நாம் சுத்தம் செய்ய முன் எடுத்திருக்கிறோம். குமரியில் ஆரம்பித்து தூத்துக்குடி வரை இந்த வேலை ஆரம்பித்திருக்கின்றோம்.

நம்முடைய நோக்கம் இன்றிலிருந்து ஒரு வருஷம் கழித்து இந்த 175 கிலோமீட்டர் கடற்கரை பகுதி எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும் என்பது தான். இயற்கையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கு. வீ த லீடர்ஸ் ஐ பொறுத்தவரைக்கும் சும்மா ஒரு நாள் கிளீன் பண்ணிணோம் என்று முடியவில்லை. இன்னைக்கு துவக்க வேலை மட்டும்தான். இந்தியாவில மட்டுமே ஒரு வருடத்திற்கு நாம் போடக்கூடிய பிளாஸ்டிக் குப்பைகள் மட்டுமே 26 ஆயிரம் டன். அதுல 16 ஆயிரம் டன் மட்டும்தான் நாம் எடுக்கிறோம். நிலத்தடி நீர் எவ்வளவு ஆழமா போயிருக்குன்னு பாருங்க. நம்முடைய காலத்திற்கு பிறகும் இந்த பீச் இருக்கணும், இயற்கை சுத்தமா இருக்கணும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாம இளைஞர்கள் நீங்க இங்க வந்து இந்த வேலையை செய்ய வேண்டும். வியர்வை வரணும். கையில் அழுக்குபடணும். நாம எல்லாத்தையும் எடுத்து அந்த குப்பையை பாதுகாத்து போடணும். நம்ம எவ்வளவு கிராம் பிளாஸ்டிக் எடுத்தோம் எவ்வளவு கிராம் பாட்டில் எடுத்தோம் இது எல்லாத்தையும் நாம இன்னைக்கு அக்கவுண்ட் பண்ண போறோம்.

இளைஞர் பெருமக்கள் தயவு செய்து, அடுத்த வாரமும் இந்த பீச்ல ஒரு போர்டை புடிச்சிட்டு ஒரு வாலண்டியர் தயவு செய்து எங்க ஊர்ல குப்பம் போடாதீங்க. இத கஷ்டப்பட்டு சுத்தம் பண்ணிருக்கோம். தயவு செய்து சுத்தமாக வைத்திருப்பதற்கு நீங்க உதவுங்க. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே வீதலீடர்ஸ் அமைப்பு நண்பர்கள் 73 ஆயிரத்து 245 பேர் இணைந்துள்ளனர். நீங்க இந்த வாரம் வீ த லீடர்ஸ் மெம்பரா இருக்கறீங்க அடுத்த வாரம் வீ லீடர்ஸ் மெம்பர் இல்லாதவங்க ஒருத்தவங்கள கூட்டிட்டு வந்து நாங்க பீச் சுத்தம் பண்றோம். குமரியை பொறுத்தவரை இந்தியாவில சுத்தமான குமரி முனை என்கின்ற பெயர் எடுப்பதற்கு வீதி லீடர்ஸ் குமரி மக்களோடு இணைந்து பணி செய்யும். என பேசினார்.

# சென்னையில் ஆக.6 மற்றும் 20ல் மூத்த குடிமக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம்



சென்னை: சென்னை மேற்கு மாம்பலத்தில் ஆக.6, 20 ஆகிய தேதிகளில் மூத்த குடிமக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் ட்வின்டெக் ஹெல்த்கேர் சர்வீசஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முகாமில் பங்கேற்க முன்பதிவு கட்டாயம்.

முன்பதிவு செய்வது எப்படி?

சென்னைட்வின்டெக் ஹெல்த்கேர் சர்வீசஸ், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்காக ஆகஸ்ட் 6 மற்றும் 20 ஆகிய தேதிகளில் சென்னை மேற்கு மாம்பலத்தில் இலவச முழுமையான கண் பரிசோதனை முகாமை நடத்துகிறது.

இதில் பங்கேற்க 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் வரும் ஆகஸ்ட் 4ம் தேதிக்குள், காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, 97104 85295 என்ற எண்ணில் வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

என்னென்ன பரிசோதனைகள்?

இந்த பரிசோதனையில் பார்வைத் திறன் மதிப்பீடு, கண்ணாடி பவர் பரிசோதனை (ரிஃப்ராக்ஷன்), கண்புரை (Cataract) பரிசோதனை, கண் அழுத்த நோய் (Glaucoma) பரிசோதனை, கண் உள் அழுத்தம் (IOP) அளவீடு, கண்ணின் முன்பகுதி பரிசோதனை, விழித்திரை (Retina) பரிசோதனை, உலர் கண் (Dry Eye) மதிப்பீடு ஆகியவை மேற்கொள்ளப்படும். தேவையெனில் மேம்பட்ட சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்காக நிபுணர் ஆலோசனை மற்றும் உரிய பரிந்துரையும் வழங்கப்படும்.

“இம்முயற்சியின் நோக்கம் கண் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, தவிர்க்கக்கூடியபார்வை இழப்பைத் தடுத்து, மூத்த குடிமக்கள் நல்ல பார்வையுடன் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ உதவுவதே,” என்று ட்வின்டெக் ஹெல்த்கேர் சர்வீசஸ் இயக்குநர் அ.மகாலிங்கம் தெரிவித்துள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.